TNTP130013352026

Presented on : 02-07-2026
Registered on : 02-07-2026
Decided on : 09-07-2026
Duration : 0 years, 0 months, 7 days

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முசிறி

முன்னிலை: திரு.ரா.சுரேஷ்குமார் B.A., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர், முசிறி
நீதித்துறை நடுவர், துறையூர் (முழு கூடுதல் பொறுப்பு)

2026 ம் வருடம் ஜூலை மாதம் 09 ம் தேதி வியாழக்கிழமை

Crlmp. No.700/2026

CNR.No.TNTP13-001335-2026

........

பாலசுப்ரமணியன், வயது (58/2026),
த/பெ.தங்கராசு,
1/77, வடக்குதெரு,
வேங்கடத்தானூர் கிராமம்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம். ... மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர்

/Vs/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
துறையூர் காவல் நிலையம்,
குற்ற எண்.264/2026,
U/s.303(2), 62 of BNS Section 21(1)
Mines and Minerals (Development and Regulation)
Act. ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இறுதியாக 09.07.2026 ல் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள்

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.09 13:32:34 +0530

ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு சங்கதிகளையும் பரிசீலிக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் இவ்வழக்கில் மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் ஆவார். வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 48 AT 9768 என்ற பதிவெண் கொண்ட JCB அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை தன்னிடம் ஒப்படைக்ககோரி 497 & 503 of BNSS இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசு தரப்பில் மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும், மேற்கண்ட வாகனத்தை மனுதார்/நிகழ்நிலை புகார்தாரரிடம் ஒப்படைத்தால் வாகனத்தை உருமாற்றம் செய்து விற்பனை செய்து விடுவார் என்றும், வழக்கின் விசாரணையின்போது வழக்கு சொத்தை ஒப்படைக்க மாட்டார் என்றும், அதனால் விசாரணை பாதிக்கப்படும் என்றும், எனவே, மனுதாரருக்கு இடைக்காலமாக வழக்கு சொத்தை வழங்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. **தீர்வு :–**

மனு அனுமதிக்கத்தக்கதா ?

4. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் இந்த குற்ற எண்ணில் மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்றும், வசந்தமலர் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் கடந்த 06.06.2026ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, வழக்கு சொத்தானது நீதிமன்றத்தில் கடந்த 07.07.2026ம் தேதி RP.No.88/2026–ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரரின் வாகனத்தை காவல் நிலையத்தில் வைத்திருப்பதால் எந்தவித பயனும் ஏற்படபோவதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்தும், இந்த வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.09 13:32:43 +0530

**5. <u>நிபந்தனை</u> :-**

i) மனுதாரரும் அவருக்கு ஆதரவாக ஒருவரும் தலா ரூ.12,00,000/-ற்கு ஜாமீன் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

ii) நான்கு சக்கர வாகனத்தின் அசல் R.C புத்தகத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

ii) வழக்கு சொத்தான நான்கு சக்கர வாகனத்தின் புகைப்படம் மற்றும் 63 BSA சான்றுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

iii) மனுதாரர் பஞ்சநாமா தயார் செய்து கொடுக்கவேண்டும்.

iv) மனுசொத்தை அழிக்கவோ, அதன் தன்மையை மாற்றவோ கூடாது.

v) வழக்கு விசாரணையின் போது தேவைப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். வழக்கின் முடிவில் கட்டுப்படவேண்டும்

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 09-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.09 13:32:51 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
துறையூர்.